Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELAANATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆவணி 17 | (02-9-1993) | வியாழக்கிழமை | ஓசை 196

## கடந்த 5 மாதங்கள் விசர்நாய்கடிக்கு எவரும் உள்ளாகவில்லை என அறிவிப்பு

விசர்நாய்க் கடிக்கு இவ் வருடத்தில் இதுவரை ஆறு பேர் உயிரிழந்துள்ளதாகவும் கடந்த ஐந்து மாத காலமும் எவரும் விசர்நாய்க்கடிக்கு இலக்காகவில்லையெனவும் சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனையின் புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது. முதல் மூன்று மாதங்களுக்குள்ளேயே இந்த ஆறுபேரும் இறந்ததாகவும் கடந்த ஐந்து மாதங்கள் எவரும் விசர்நாய்க்கடிக்கு இலக்காகவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதில் பொது அமைப்புகள் கூடிய பங்கெடுத்தமையே இதற்கு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை கிளிநொச்சியில் விசர்நாய்கடிக்கு உள்ளாகுபவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு 20 பேர்வரை அங்கு விசர்நாய்க்கடிக்கு உள்ளாகின்றனர். கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு ஒரு மாதத்திற்கு 1000 கன சதுரமீற்றர் அளவு ஏ. ஆர். வி. மருந்து தேவைப்படுவதாகவும் இவற்றில் பெருமளவு மருந்தை தாண்டிக்குளம் படையினர் தடுத்து (4ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி ராணுவ முகாம்களை அரசு பலப்படுத்தி வருகின்றது

### பிக்கு கைது

பிழையான பிறப்பு சான்றிதழைக் கொடுத்து தேசிய அடையாள அட்டையை பெற முயன்ற பிக்கு ஒருவர் பேலியகொட பொலிசாரால் கைது செய்யப்பட்டு உள்ளார்.

சந்தேக நபரான புத்த பிக்கு பிழையை ஏற்றுக்கொண்டதை யடுத்து கம்பஹா மாவட்ட நீதிபதி கைவிரலடையாளங்களை பதிவு செய்யுமாறும், சரீரப் பிணையில் செல்லுமாறும்பணிப்புரை விடுத்ததுடன் தண்டனை வழங்குவதை செப்டம்பர் 3ம் திகதிவரை ஒத்தி வைத்தார்.

## புதிய தாக்குதலுக்கு புலிகள் திட்டமாம்

[கொழும்பு]

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்கள் மீது பாரிய தாக்குதல்களைத் தொடுப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராகி வருவதாக சிறிலங்கா புலனாய்வுத்துறையினருக்குக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து அங்குள்ள இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினரும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் இத் தாக்குதல்கள் தரையில், அல்லது கடலில் நிகழலாம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் ஆறு, ஏழு மாதங்கள் தணிந்திருந்த விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்தும், வடக்கு- கிழக்கில் மாரிகாலம் ஆரம்பமானதைத் தொடர்ந்தும் இத் தாக்குதல்கள் இடம்பெறலாம்எனக் கருதப்படுகின்றது. மேலும், கடந்த மாரி காலத்தின் போது கட்டைக்காட்டிலும், பலாலி இராணுவ முகாம் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல்கள் பற்றியும், அவற்றில் இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றியும் பாதுகாப்பு வட்டாரங்களில் கவனத்தில் கொள்ளப்பட்டதாகவும் அவ் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

மேலும் விடுதலைப் புலிகளின் பலம், கடற்பலம் அதிகரித்ததைத் தொடர்ந்தும் கடற்பரப்பிலும்தாக்குதல்கள் இடம்பெறலாம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தவேளை அரசின் இராணுவ ரீதியான நெருக்குதல்களைக் குறைக்கவும், தனது பலத்தை வெளிப்படுத்தும் வகையிலும் புலிகள் தமது போராட்ட நடவடிக்கைகளை அதிகரிக்ககூடும்என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர் வரும்மூன்று மாத காலத்திற்கு புலிகளிடம் இருந்து கடற்படை, இராணுவம் மீதான தாக்குதலை எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவித்தார்.

## அனுமதிப் பத்திரமின்றி படகோட்ட முடியாது

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் படகுச்சேவையில் ஈடுபடும் படகோட்டிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. நாளை வெள்ளிக்கிழமை காலை 10 00மணிமுதல் மாலை 4 00 மணிவரை கிளாலி படகோட்டிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் கிளாலி மக்கள் போக்குவரத்து காரியாலயத்தில் வைத்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களே இனி கிளாலியில் படகோட்டிகளாக செயற்பட முடியும் நாளை சகல படகோட்டிகளும் தமது சுயவிபரங்களுடனும், வழங்கப்பட்ட படகு இலக்கங்களுடனும் கிளாலி மக்கள் போக்குவரத்து காரியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு தமிழீழ அரசியல் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## ஜனாதிபதி ஆட்சிமுறை நீடிக்கவே அரசு முயற்சி

## காரைநகர் படையினர் எறிகணை தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா படையினர் தமது நிலைகளிலிருந்து நேற்றுக் காலை 9.35 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதி மக்கள் குடியிருப்புகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர் இவ் எறிகணைகள் மக்கள் குடியிருப்புகளை அண்மித்த வயல் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் சிறிலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானம் ஒன்று சங்கானை, சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, தொல்புரம், மூளாய், அராலிப் பகுதிகளை உள்ளடக்கி அப்பகுதி வான்பரப்பில் வட்டமிட்டுச் சென்றது. [41]

## தொழில்நுட்ப மாணவர்க்கு மகாபொல பரிசு கிடைக்கும்

(கொழும்பு)

நாடெங்கிலுமுள்ள 14 தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கான உதவிப் பணத் தொகை அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கல்வி உயர் கல்வி அமைச்சுமேற்கொண்டுள்ளது. இதனால் 18.000 தொழில்நுட்ப மாணவர்கள் நன்மை அடைய உள்ளனர். இவ்வாறு தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழிற்பயிற்சிகளை முடித்து வெளியேறும் மாணவர்களுக்குச் சுயதொழில் செய்ய உபகரணங்களைவழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. வருமானம் குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக மேலும்பல வசதிகள் அளிக்கப்படுவதுடன் மகாபொல புலமைப்பரிசில் பணம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### நிதிப் பற்றாக்குறை

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் அகதிகளுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள பெரும் (4ஆம் பக்கம் பார்க்க)

## 1991/92 கல்வியாண்டில் 9000பேருக்கு அனுமதி

# பல்கலைக்கழக அனுமதி குறைக்கப்பட மாட்டாது

### உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

91/92ஆம் கல்வி ஆண்டுக்கென சகல பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதிக்கப்படும் மாணவர்களது எண்ணிக்கை எவ்விதத்திலும் குறைக்கப்பட

...க்கு 200 மாணவர்களை யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு சேர்த்துக்கொள்வதற்கு வசதி இருந்த போதிலும் 67 மாணவர்களே தகுதி பெற்றுள்ளனர்.

90 / 91 ஆம் கல்வி ஆண்டுக்கென மொத்தம் 8000 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். 91 / 92 ஆம் கல்வி ஆண்டுக்காக சுமார் 9000 மாணவர்

சரீரப் பிணையில் செல்லுமா றும்பணிப்புரை விடுத்ததுடன் தண்டனை வழங்குவதை செப் டம்பர் 3ம் திகதிவரை ஒத்தி வைத்தார்.

தனித்திருந்த விடுதலைப் புலி களின் தாக்குதல்கள் அதிகரித் துள்ளதைத் தொடர்ந்தும், வடக்கு- கிழக்கில் மாரிகாலம் தும் இத் தாக்குதல்கள் இடம் பெறலாம் எனக் கருதப்படுகின் றது. மேலும், கடந்த மாரி காலத்தின் போது கட்டைக் காட்டிலும், பலாலி இராணுவ முகாம் மீதும் விடுதலைப் புலி கள் மேற்கொண்ட பாரிய தாக்குதல்கள் பற்றியும், அவற்றில் இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றி யும் பாதுகாப்பு வட்டாரங் களில் கவனத்திற் கொள்ளப் பட்டதாகவும் அவ் வட்டாரங் களில் இருந்து தெரியவருகின் றது.

மேலும் விடுதலைப் புலிக ளின் பலம், கடற்பலம் அதி கடற்பரப்பிலும் தாக்குதல்கள் இடம்பெறலாம் எனவும் பாது காப்பு வட்டாரங்களில் எதிர் பார்க்கப்படுவதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

இத்தவேளை அரசின் இரா ணுவ ரீதியான நெருக்குதல் களைக் குறைக்கவும், தனது பலத்தை வெளிப்படுத்தும் வகையிலும் புலிகள் தமது போராட்ட நடவடிக்கைகளை அதிகரிக்ககூடும்என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர் வரும்மூன்று மாத காலத்திற்கு புலிகளிடம் இருந்து கடற் தாக்குதலை எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவித்தார்.

வெளியேறும் மாணவர்களுக் குச் சுயதொழில் செய்ய உப

(4ஆம் பக்கம் பார்க்க)

# அனுமதிப் பத்திரமின்றி படகோட்ட முடியாது

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் படகுச்சேவை யில் ஈடுபடும் படகோட்டி களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00மணிமுதல் மாலை 4.00 மணிவரை கிளாலி படகோட் டிகளுக்கான அனுமதிப் பத் திரங்கள் கிளாலி மக்கள் போக்குவரத்து காரியாலயத் தில் வைத்து வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களே இனி கிளாலியில் படகோட்டிகளாக செயற்பட முடியும். நாளை சகல படகோட்டிகளும் தமது சுயவிபரங்களுடனும், வழங்கப் பட்ட படகு இலக்கங்களுட னும் கிளாலி மக்கள் போக்கு வரத்து காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு தமிழீழ அர சியல் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# அகதிமுகாம்களில் போலியோ பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

அகதி முகாம்களில் வசிக்கும் குழந்தைகளுக்கு போலியோ நோய் ஏற்படும் அபாயம் ஏற் பட்டுள்ளதால் அவர்களுக்கு மேலதிகமாக இரு தடவைகள் போலியோ தடுப்பூசி மருந்து ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெருக்கமாக மக்கள் வசிக் கும் இடங்களில் உள்ள குழந் தைகளுக்கு போலியோ நோய் ஏற்படும் சாத்தியக்கூறு இருப் பதால் அகதி முகாம்களில் உள்ள குழந்தைகளுக்கு வழ மையாக போடப்படும் போலியோ தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டிருந்தாலும் அவர் களுக்கு மேலும் இரு தடவைகள் போலியோ தடுப் பூசி மருந்து ஏற்றப்படவேண் டுமெனவும் சகல அகதிமுகாம் களில் உள்ள குழந்தைகளுக் கும் உடனடியாக இத் தடுப் பூசி போடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஜனாதிபதி ஆட்சிமுறை நீடிக்கவே அரசு முயற்சி

## சமசமாஜக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசியல் அமைப் புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு வைப் பகிஷ்கரிக்குமாறு எதிர்க் கட்சிகளைக் கேட்க லங்கா சமசமாஜக் கட்சி தீர்மானித் துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கக் கோரும் எதிர்க் கட்சிகளின் கோரிக் கையை தவிர்க்கவே அரசு இந்தத் தெரிவுக்குழுவை நிய மித்திருப்பதாக லங்கா சம சமாஜக் கட்சி குற்றம் சாட்டி யுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவது என்று தெரி வுக்குழுவை நியமித்துக் காலம் தாழ்த்தி வருவது போல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீடிக்கவே அரசு அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் செய்யத் தெரிவுக் குழுவை அமைத்துள்ளது என்று அக்கட்சி குறிப்பிட்டுள் ளது.

1991/92 கல்வியாண்டில் 9000பேருக்கு அனுமதி

# பல்கலைக்கழக அனுமதி குறைக்கப்பட மாட்டாது

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

91/92ஆம் கல்வி ஆண்டுக் கென சகல பல்கலைக் கழகங் களுக்கும் அனுமதிக்கப்படும் மாணவர்களது எண்ணிக்கை எவ்விதத்திலும் குறைக்கப்பட மாட்டாது இவ்வாறு உயர் கல்வி அமைச்சர் தெரிவித் துள்ளார்.

மருத்துவ பீடத்துக்கு சேர்த் துக்கொள்ளப்படும் மாணவர் களது தொகையும் குறைக்கப் படமாட்டாது.

யாழ். பல்கலைக்கழக மருத் துவ பீடத்தைப் பொறுத்த வரையில் 90/91 கல்வி ஆண்டு க்கென 150 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு வசதி இருந்த போதிலும் 108 மாண வர்களே தகுதிபெற்றிருந்த னர், 91/92 ஆம் கல்வி ஆண்டு க்கு 200 மாணவர்களை யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்கு சேர்த்துக்கொள் வதற்கு வசதி இருந்த போதி லும் 67 மாணவர்களே தகுதி பெற்றுள்ளனர்.

பல்கலைக் கழக அனுமதிக் கொள்கைக்கு அமைய பத்து சத வீத மாணவர்கள் தாம் விரும்பும் பல்கலைக்கழகத் தைத் தெரிவு செய்யும் உரிமை யைக் கொண்டுள்ளனர் 'இதன் படி 91/92 ஆம் கல்வி ஆண் டுக்கான யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு 60 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

90/91 ஆம் கல்வி ஆண்டுக் கென மொத்தம் 8000 மாண வர்கள் பல்கலைக் கழகங்களு க்கு அனுமதிக்கப்பட்டனர். 91/92 ஆம் கல்வி ஆண்டுக் காக சுமார் 9000 மாணவர் கள் அனுமதிக்கப்படுவர். மரு த்துவ பீடங்களுக்கு எதிர்கால த்தில் அதிக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக மருத்துவ பீடத் திற்கான அனுமதி குறைக்கப் படும் என பல்கலைக் கழக மானியக்குழு அறிவித்திருந் ததை இங்கு குறிப்பிடத்தக் கது.

# மருத்துவபீட விடுதியில் சடலமாக யாழ். மாணவன்

[கொழும்பு]

கோண்டாவிலைச் சேர்ந்த விநாயகமூர்த்தி சிவகுகதாசன் சிவராஜ் என்ற பேராதனை பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் அவரது அறையில் இறந்து கிடக்க காணப்பட் டார். இவரது மரணம் கொலையா, தற்கொலையா என பொலிஸ் விசாரணை நடைபெற்று வருகிறது.

மேற்படி மாணவன் முன்னர் கண்டியில் லேடிஹில், கட்ட டத்தில் இயங்கிவரும் தனியார் விடுதியில் தங்கியிருந்தார். மாணவன் காணாமற்போன தாககிடைத்த புகாரையடுத்து பொலிசார் தேடுதல் நடத் தினர். இவரது சடலம் மேற் படி விடுதியில் அவரது அறை யில் ஐந்து நாட்களின்பின் கண் டெடுக்கப்பட்டது.

இவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இவரது அறையிலிருந்த மேசையில் இரு வெற்று கிருமி நாசினி போத்தல்கள் காணப் பட்டன. இவர் கதிரையில் சாய்ந்த நிலையில் இறந்து கிடக்க காணப்பட்டார். இவர் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து பேராதனை மருத்துவ பீடத்திற்கு இட மாற்றம் பெற்று வந்தவர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

முல்லைத்தீவு பட்டிக்குடியிருப்புகிராமத்திற்கு

# முன்னேற முயன்ற படையினர் புலிகளால் விரட்டியடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் பட்டிக்குடியிருப்பு கிராமம் மீது பலத்த எறிகணைத் தாக்குதல் நடத்தியவாறு அக் கிராமம் நோக்கி சிங்கள குடி யேற்ற முகாம்களிலிருந்து முன்னேறமுயன்ற இராணு வத்தினரின் முயற்சி விடுத லைப்புலிகளால் முறியடிக்கப் பட்டது.

நேற்று முன்தினம் காலை 11-45 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை சிங்கள குடி யேற்ற இராணுவ முகாம்களி லிருந்து படையினர் தொடர்ச் சியாக எறிகணைத் தாக்கு தலை நடத்தியவாறு பட்டிக் குடியிருப்பு கிராமம் நோக்கி முன்னேற படையினர் முயன் றனர். படையினரை இடை மறித்து விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தியதை யடுத்து இராணுவத்தினர் பின் வாங்கிச் சென்றனர். இத் தாக்குதலின்போது படையி னருக்கு ஏற்பட்ட சேதவிபரங் கள் தெரியவரவில்லை.

படையினரிடமிருந்து 203 ஷெல்-01, தொப்பி-01 என் பன விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டது.

# பருத்தித்துறைக்கு 'குமாரி' இன்று வருகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு ''குமாரி'' என்ற கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

இக் கப்பல் மேற்படி துறை முகத்துக்கு இன்று வந்தடை யும் என்ற தகவல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் யாழ். செயலகத்துக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பருத்தித்துறை துறைமுகப் பகுதியிலிருந்து அகற்றப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடி மீண்டும் நேற்று கட் டப்பட்டது.

இதேவேளை பருத்தித் துறை இறங்குதுறைக்கு நேற்று வருமென எதிர்பார்க்கப்பட்ட வாதுவ கப்பல் திருகோண மலை துறைமுகத்தில் மேலும் இரண்டாயிரத்து ஐந்நூறு மெற்றிக் தொன் மா ஏற்றி வருவதற்காக அங்கு தரித்து நிற்பதாக தெரியவருகிறது.

(க, யோ)

# மாதிரிக் குடியேற்றம் சுன்னாகத்தில் திறப்பு

(சுன்னாகம்)

தமிழர் புனர்வாழ்வு கழகத் தால் சுன்னாகம் தெற்கில் ஏற்படுத்தப்பட்ட மாதிரி குடி யேற்றத் திட்டம் நேற்று மாலை திறந்துவைக்கப்பட் டது. சுன்னாகம் சிற்றூர் பொறுப்பாளர் கலியுகன் தலைமையில் திறப்புவிழா நடந்தது. தமிழீழ தேசியக் கொடியை யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பா ளர் இளம்பரிதி ஏற்றிவைக்க வலிகாமம் கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திருக் குமரன் மங்கள விளக்கை ஏற்றிவைத்தார்.

மகளிர் அமைப்பு பொறுப் பாளர் செல்வி ரதி குடியேற் றத்திட்டத்தை திறந்து வைத் தார் குடியிருப்பாளர்களுக் கான திறப்புகளை தமிழர் புனர்வாழ்வு கழக பொறுப் பாளர் ரவி வழங்கினார். இக் குடியேற்ற திட்டத்தில் 14 குடிசைகள் நீர் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளன. அள வெட்டி, கட்டுவன், மயிலிட்டி பகுதிகளிலிருந்து இடம்பெயர் ந்து மிக பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு இவை வழங் கப்பட்டன. 21 பரப்பில் இக் குடியேற்றம் அமைக்கப்பட் டுள்ளது. (11) (09)

# 150 பேர் கைது

(கொழும்பு)

கடந்த மூன்று கிழமைகளில் கொழும்பு நகரில் 150 தமிழ் இளைஞர்கள் கைதாகியுள்ள னர். நகரிலுள்ள விடுதிகளி லும், இல்லங்களிலும் பொலி சார் நடத்திய தேடுதலின் போதே இவர்கள் கைது செய் யப்பட்டனர்.

# பீரங்கிப் படகிலிருந்து மீனவர் மீது ஷெல்தாக்கு

(வடமராட்சி)

வெற்றிலைக்கேணியிலி ருந்து காங்கேசன்துறை நோக்கி சென்றுகொண்டிருந்த சிறிலங்கா கடற்படைப் பீரங் கிப் படகிலிருந்து கட்டுமரத் தில் மீன் பிடித்துக் கொண்டி ருந்த மீனவர்களை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொலிகண்டி, வல்வெட்டித் துறைப் பகுதியில் மீனவர்கள் மீது நேற்று பிற்பகல் 1.20 மணியளவில் இருபதுக்கு மேற் பட்ட எறிகணைகள் ஏவப்பட் டன இடையிடையே 50 கலி பர் தாக்குதல்களும் நடத்தப் பட்டன.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவிலும் வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்படையி னர் ஷெல் தாக்குதலை மேற் கொண்டனர் எனினும் சேதங் கள் ஏற்பட்ட தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (யோ)

## வரி விளம்பரம்

பாலராசிரிபராக

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி ஆரம்பமாகிறது க.பொ.த (சா/த) குறைந்த பட்ச தகைமையாகும். நேரில் கற்க வசதியற்றோர் தபாலகமூலமும் பயிலலாம் பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக் கல்லூரி 73 பருத்தித் துறைவீதி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். [4097]

## விபத்து

மீசாலை சந்தியில்நேற்றுமுன் தினமிரவு 7 15 மணியளவில் வெளிச்சம் இல்லாது வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் நேரெதிரில் மோதிக் கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார் [86]

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்

Spoken English
by
Britto

புதிய பிரிவு

ஆரம்பம்
04-09 93

[சி/7336]

உ

நாவலர்
கல்விக் கழகம்

ஆண்டு-4
புலமைப் பரிசில்
பரீட்சை
(1994)

புதிய வகுப்பு
ஆரம்பம்
02 09-1993

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். [சி-7308]

## மிருதங்க அரங்கேற்றம்

விடுதலைப் புலிகளின் போராளி தினேஷ், அரியநாயகம், சிறிகாந்தா அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தின துரை தலைமையில் நடைபெறவுள்ள இவ் அரங்கேற்றத்திற்காக யாழ் மாவட்ட சிறப்புத்தளபதி செல்வராசா, மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி செல்வி ஜெனா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்கவுள்ளனர்.

எம் உள்ளத்துள் உறங்குகின்ற மாவீரனின்

## ஈராண்டு நினைவலைகள்



### 2-ம் லெப். டெனி

(செல்வராசா சுதர்சன்)

[கண்ணன்]

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 1?-0?-1975 | 02-09-1991 |

துள்ளியோடும் பள்ளிப் பருவமதில்
தணியாத தாகம் கொண்டான்
தன்னிகரில்லாத் தலைவன் காட்டிய
வழிதனை நாடிச் சென்றான்.

தத்தித் திரிந்து நாம் தவழ்ந்த மண்ணிது
எங்களின் மண்ணிது, எங்களுக்கே என்றான்.
நெஞ்சில் விடுதலை நெருப்பைச் சுமந்தான்.
மணலாற்று மண்ணிலே வீரகாவியம் படைத்தான்.

எங்களன்புக் கண்ணா உனைப் பெற்றதனால்
பெருமை கொண்டு நிற்கின்றோம்.
விடியலது வெகு தொலைவில் இல்லையென
உன் நினைவால் உறுதி எடுக்கின்றோம்.

என்றும் உன் நினைவுடன்
– குடும்பத்தினர்.

'துவாரகன் வீதி'
மீசாலை.

(5811)

## 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

| மண்ணில் மணியாய்: | விண்ணில் ஒளியாய் |
| --- | --- |
| 14.05.1?5 | 18.?8.1?8? |

திதி:-02.09.1993

குடும்பத்தலைவனாய் குணம் நிறைந்த செம்மலாய்
குலத்தின் நலம் காக்க குறி கொண்ட காவலனாய்
குலவும் மொழிகேட்டு ஆதரவளித்த தந்தையாய்
கூடி வாழ்ந்த நாட்களினை கொண்டோம் நாலாம் ஆண்டுதனிலே.

ச. குவீந்திரன்
இல. 675
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்

(5764)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை சின்ன அக்காச்சி

[பஞ்சலிங்கம் தயானந்தன்]

| மலர்வு | வீரச்சாவு |
| --- | --- |
| 17. 11. 1974 | 02. 09. 1990 |

மலருகின்ற சுதந்திர தமிழீழத்தில்
மாவீரனாகிய நீயும்
காற்றினிலே உலா வருவாய்
என்ற நினைவோடு காத்திருக்கின்றோம் - தம்பி.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

சின்ன அக்காச்சி வீதி, - குடும்பத்தினர்.

## நினைவு கூருகின்றோம்... 1993-09-02

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவு-விசுவமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ **குழந்தை** (— ராமசாமி-வண்டி)

1987ஆம் ஆண்டு மன்னார் - பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த-

**டென்சில்** (சூசை மனுவேல் மிக்கேல் - மடுக்கோயில்-மன்னார்)

1989ஆம் ஆண்டு மணலாறு குமுழமுனைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-

**2-ம் லெப். வரதேயன்** (பாலசிங்கம் யோகேஸ்வரன்-1ஆம் படிவம், கல்மடு வவுனியா)

இதே ஆண்டு கொற்றாவத்தையில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-,

**லெப். சூரன்** (அருணாசலம் சுரேந்திரதேவர்-யாழ்ப்பாணம்)

கரவெட்டி - ஆண்டான் வளவுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டுசுட்டுக் கொல்லப்பட்ட சிற்றூர்தி சாரதியானஇராசகிராமத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். அன்ரன் /சிவா** (கனகசபாபதி கனகராஜ்-விநாயகபுரம் - துணுக்காய்)

**2-ம் லெப் வசி** (சுப்பிரமணியம் கனகேஸ்வரன் - பாலையடி, விநாயகபுரம் - துணுக்காய்)

**2-ம் லெப். சாரதி** (இரத்தினம் சேதீஸ்வரன் - 12ஏ, 2ஆம் படிவம் - வவுனிக்குளம்)

**மிரேஸ் / நீரேஸ்** (செல்வராசா சிறிதரன் -கொக்கிளாய் மணலாறு)

**சில்மன்** (அரியரத்தினம் ஜீவரத்தினம் - பன்றிக்கெய்த குளம், ஓமந்தை -வவுனியா)

**பாலேஸ்** (— — புளியங்குளம் - வவுனியா)

**நித்தி** (சுப்பிரமணியம் சிவகுமார் - காந்திகிராமம், கோணாவில் - கிளிநொச்சி)

**மிரேஸ்** (சிவலிங்கநாதன் சிவசங்கர் - கொத்தன்கலட்டி வல்வெட்டித்துறை)

**ஆட்தீன்** (பாலசிங்கம் மோகனதாஸ் - மந்திப்புலம்-கொக்குவில் - யாழ்)

**துஷ்யந்தன்** (சின்னராசா உதயராசா - [சிறிமுருகன் குடியேற்றம், வல்வெட்டித்துறை)

முல்லைத்தீவு -சி, டபிள்யூ சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். பொஸ்மின்** (காவியப்பன் சுந்தரராஜ் 9ஆம்கட்டை பரப்பாங்கண்டல்- மன்னார்)

திருமலை - தம்பலகாமம், பாலம்போட்டாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சுமிந்தன்** (விஜயபாலு விஜயகுமார்-தம்பலகாமம்-திருமலை)

**கபில்** [வாசுதேவன் பரமேஸ்வரன் - தம்பலகாமம் - திருமலை]

யாழ் - கஸ்தூரியார் வீதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப் பிரிந்த -

**கப்டன் ரவி** [மாசிலாமணி ரவிச்சந்திரன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்]

**சின்னஅக்காச்சி** (பஞ்சலிங்கம் தயானந்தன் - நீர்வேலி தெற்கு - யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் வெடிமருந்துப் பொதிகளை படகில் ஏற்றி வந்து கொண்டிருந்தபோது சிறிலங்காக் கடற்படையினரின் முற்றுகையின்போது தனது படகினை வெடிக்க வைத்ததன் மூலம் வீரச்சாவெய்திய -

**கப்டன் மோகன்/மேத்திரி** (காசிநாதன் நகுலேஸ்வரன் - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர் - ஐயங்கேணியைச்

கல்விக் கழகம்

# ஆண்டு - 4

புலமைப் பரிசில்

**பரீட்சை**

**(1994)**

புதிய வகுப்பு

ஆரம்பம்

02 09-1993

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். [சி-7308]

---

துள்ளியோடும் பள்ளிப் பருவமதில்
தணியாத தாகம் கொண்டான்
தன்னிகரில்லாத் தலைவன் காட்டிய
வழிதனை நாடிச் சென்றான்.

தத்தித் திரிந்து நாம் தவழ்ந்த மண்ணிது
எங்களின் மண்ணிது, எங்களுக்கே என்றான்.
நெஞ்சில் விடுதலை நெருப்பைச் சுமந்தான்.
மணவாற்ற மண்ணிலே வீரகாவியம் படைத்தான்.

எங்களன்புக் கண்ணா உனைப் பெற்றதனால்
பெருமை கொண்டு நிற்கின்றோம்.
விடியலது வெகு தொலைவில் இல்லையென
உன் நினைவால் உறுதி எடுக்கின்றோம்.

என்றும் உன் நினைவுடன்

'துவாரகன் வீதி'
மீசாலை.

— குடும்பத்தினர்.
(5811)

---

சுவை நாடுவோர் விரும்பிச் சுவைப்பது

★ **சொக்கா - சொக்லட் - CHOCA**
(பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றது)

★ **ஜவ் - பிக்ஸ் கம் - JAF - FIX GUM**
(பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றது)

அனைத்து விற்பனை நிலையங்களிலும் ஏகோபித்த ஆதரவுடன் விற்பனையில் முன்னணி வகிக்கின்றது.

கேட்டு வாங்குங்கள்

# "சொக்கா"

**சொக்லட்டுக்களை**

மேற்குறிப்பிட்ட தயாரிப்புக்களை விநியோகம் செய்வதற்கு வடமராட்சி, தென்மராட்சி பிரிவுகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். விநியோகஸ்தராக பதிவுசெய்ய விரும்புவோர் 6.9.1993 முன்னதாக நேரிலோ/ தபாலிலோ தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

MARKETING MANAGER
CHOCA DIsTRIBUTORY
1&4, 1St CROSS ST, JAFFNA.

(சி7337)

---

## வீரவேங்கை சின்னஅக்காச்சி

[பஞ்சலிங்கம் தயானந்தன்]

மலர்வு
17. 11. 1974

வீரச்சாவு
02. 09. 1990

மலருகின்ற சுதந்திர தமிழீழத்தில்
மாவீரனாகிய நீயும்
காற்றினிலே உலா வருவாய்
என்ற நினைவோடு காத்திருக்கின்றோம் - தம்பி.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்,

சின்ன அக்காச்சி வீதி,
நீர்வேலி

- குடும்பத்தினர்.
(சி-7335)

---

## 3-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தாயின் மடியில்
21-07-1975

தாயக மண்ணில்
02-09-1990

## வீரவேங்கை மிரேஸ்

(சிவலிங்கநாதன் சிவசங்கர்)

திண்ணமுடன் களம் புகுந்து
தீரனாய் ஆகியவன் - இங்கே
வண்ணமுடன் சமர் ஆடி
வழிசென்றவே யேகியவன் !

கன்னல் மொழித் தமிழாளின்
விழி காக்க ஓடியவன் - இங்கே
மின்னல் எனப் போயிட்டான்
முல்லை மண்ணின் ஓரத்திலே !

கண்ட கனா நனவாகும்
கலங்காதே எங்கள் மிரேஸ் - நீ
நீண்ட நிலம் புயலாகும்
மேதினியில் இனிமேலே ......!

முல்லையிலே 02-09-90 அன்று சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் இவருடன் வீரமரணமடைந்த ஏனைய வீரவேங்கைகளிற்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

உன் பிரிவை நினைவு கூரும்,

கொத்தியாலட்டி,
வல்வெட்டித்துறை.

அப்பா, அம்மா, தங்கை,
மற்றும் உறவினர்கள்.

(5765)

---

பரப்பாங்கண்டல் - மன்னார்)

திருமலை - தம்பலகமம், பாலம்போட்டாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சுமிந்தன்** (விஜயபாகு விஜயகுமார்-தம்பலகமம்-திருமலை)

**கபில்** (வாசுதேவன் பரமேஸ்வரன் - தம்பலகமம் - திருமலை]

யாழ் - கஸ்தூரியார் வீதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகன விபத்தில் எமைப் பிரிந்த -

**கப்டன் ரவி** [மாசிலாமணி ரவிச்சந்திரன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்]

**சின்னஅக்காச்சி** (பஞ்சலிங்கம் தயானந்தன் - நீர்வேலி தெற்கு - யாழ்)

தமிழீழக் கடற்பரப்பில் வெடிமருந்துப் பொதிகளை படகில் ஏற்றி வந்து கொண்டிருந்தபோது சிறிலங்காக் கடற்படையினரின் முற்றுகையின்போது தனது படகினை வெடிக்க வைத்ததன் மூலம் வீரச்சாவெய்திய -

**கப்டன் மோகன்/மேத்திரி** (காசிநாதன் நகுலேஸ்வரன் - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர் - ஐயன்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**அமல்** [கந்தசாமி ராஜ்குமார் - அக்கரைப்பற்று - அம்பாறை]

**கோவிந்தன்** (வெள்ளியம் தெய்வேந்திரன் - விநாயகபுரம், திருக்கோயில் - அம்பாறை)

**றோகினராஜ்** (சின்னத்தம்பி புஸ்பராசா - தும்பங்கேணி - மட்டு)

**நடேசதேவன்** (தம்பிராசா ஏரம்பமூர்த்தி - திருப்பழுகாமம் - மட்டு)

**சுந்தரேஸ்** (சின்னத்தம்பி சபாரத்தினம் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**லெப். இந்திரன்** (மரியதாஸ் மரியலூயிஸ் - சாம்பல்தீவு - திருமலை)

**செந்தூரன்** (முருகேசு சுபாஸ்கரன் - அன்புவழிபுரம் - திருமலை)

**பரணி** (பரஞ்சோதி புவனேஸ்வரன் - நிலாவெளி, திருமலை)

**சுமித்திரா** (தர்சினி நடராசா - திருமலை)

**லெப். கனகன்** (நாகலிங்கம் பாலேந்திரன் - 10. உருத்திரபுரம் - கிளிநொச்சி)

**மாதுலா** (கலாதேவி நல்லதம்பி - வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

**கப்டன் கண்ணன்** (தங்கசாமி சேகர் - ஆண்டான்குளம், அடம்பன் - மன்னார்)

**அமுதன்** [இராசதுரை சிவகுமார் - பல்லவராயன்கட்டு, முழங்காவில் - மன்னார்]

**2-ம் லெப். விஸ்வம்** [வீரசிங்கம் சிவராசன் - கோண்டாவில் கிழக்கு - யாழ்]

**2-ம் லெப். டெனி/கண்ணன்** (செல்வராசா சுதர்சன் - மீசாலை - சாவகச்சேரி)

**கவாஸ்கர்** (கனகசபை சுமித்திரன் - சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி - யாழ்)

**குமிழன்** [ஞானமனோகரன் கிருஷ்ணரூபன் - ஏழாலை வடக்கு - யாழ்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இந்தரியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி 7333]

நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

பெற்றுள்ள போது அறிவைப் பயன்படுத்துவதும், அறிவைப் பெறாத போது அறியாமையை ஒத்துக்கொள்வதுமே அறிவுடமையின் சாரம்

– கன்யூசியஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2339 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## இஸ்ரேலின் பாடம்

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் உள்ள மேற்குக்கரை பிரதேசத்திலும், காஸா பிரதேசத்திலும் பாலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்கும் திட்டமொன்றை இஸ்ரேலிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதனை இஸ்ரேலில் தற்பொழுது ஆட்சியில் உள்ள தொழிற் கட்சியானது தனது தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில், பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட்டுள்ளது எனலாம்.

இஸ்ரேல் அரசின் இந் நடவடிக்கையானது. பாலஸ்தீன மக்களின் விருப்புக்களை எந்தளவிற்கு ஈடு செய்யும், அவர்களின் சுதந்திர வாழ்விற்கு எந்தளவிற்கு பங்களிக்கும் என்பவை எல்லாம்பற்றி இப்பொழுது அறுதியிட்டுக்கூறமுடியாது விட்டாலும், இஸ்ரேல் அரசைப் பொறுத்தும் அதன் சியோனிச கோட்பாட்டில் இருந்தும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் இறங்கிவந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

ஏனெனில், இஸ்ரேலிடம் பலம் பொருந்தியதும், நவீனமயமானதுமான இராணுவம் உள்ளது. இஸ்ரேல் நாடு 1948இல் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து நடத்திய போர்களில் எல்லாவற்றிலும் அது வெற்றி பெற்றுள்ளது. அத்தோடு, கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையில் இஸ்ரேலிய இராணுவமும், புலனாய்வுத் துறையும் பெயர் பெற்றவை.

இதேவேளை, பாலஸ்தீன விடுதலை இயக்கமானது, 1980ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தது போன்று தற்பொழுது இல்லை. அவர்கள் தமது தீவிரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டே பல வருடங்கள் ஆகிவிட்டன. அதாவது, இஸ்ரேலிய இராணுவத்திற்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் இராணுவ ரீதியான அச்சுறுத்தலாக இருப்பதாக இல்லை. அத்தோடு, வளைகுடாப் போரின்போது கடைப்பிடித்த கொள்கையினால், பாலஸ்தீன விடுதலை இயக்கம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. மேலும், பாலஸ்தீனத்தின் எந்த ஒரு பகுதியும், பாலஸ்தீன போராளிகளின் கட்டுப்பாட்டிலும் இல்லை.

இந்நிலையிலும், பாலஸ்தீனத்திற்கென ஒரு சுயாட்சித் திட்டத்தை வகுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இஸ்ரேல் அரசிற்கு ஏற்பட்டுள்ளது. இஸ்

## அடையாள அட்டை துரிதமாக வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆள் அடையாள அட்டைகள் வழங்குவதை துரிதப்படுத்த ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொது மக்கள் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தால் மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலையைத் தவிர்ப்பதற்காக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்கு முதலில் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம சேவையாளர்களுக்கு அடையாள அட்டை விநியோகம் பற்றி பயிற்சியளிக்கப்படவுள்ளது.

தற்சமயம் பிரதேச செயலகங்களிலும், கிராம சேவையாளர்களிடமும் அடையாள அட்டைக்கான வேலைகள் தாமதமடைந்து வந்துள்ளன. இனிமேல் இவ்வாறு நிலவாதிருக்க திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்யவுள்ளது.

இதேசமயம் பாடசாலை மாணவர்களுக்கு ஆள் அடையாள அட்டை வழங்க பாடசாலை அதிபர்களின் உதவியும் பெறப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

(பா)

## போராடிப் பெறும் உரிமை மேலானவை என்கிறார் ஹமீத்

(கொழும்பு)

மன்றாடிப் பெறும் சலுகைகளை விட போராடிப் பெறும் உரிமைகளே மேலானவையாகும். அவற்றுக்கே மதிப்பு உண்டு. எனவே முஸ்லிம்களுக்கு இனி சலுகைகள் தேவையில்லை, உரிமைகளே வேண்டும். இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸின் ஆதரவில் பொறியியல் பீட ஈ.ஓ.ஈ பெரேரா அரங்கில் நடைபெற்ற மாநாட்டின் போது கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் மேலும் கூறுகையில்,

இதுவரை கிடைத்த சலுகைகளால் நாம் எதனைச் சாதித்து விட்டோம்? உரிமைகளுக்காகப் போராட நாம் ஏன் முனையக்கூடாது? சமுதாயத்தின் விடிவைக் காண விழையும் நான் மேடையில் எடுத்துக் கூறும் இக்கருத்துக்களை வேறு எந்த ஒரு தலைவரும் துணிந்து கூற முன்வரமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

## பயிலுநர் தாதி தெரிவு
### விண்ணப்பம் கோரப்படுகிறது

பயிலுநர் தாதிகளை சேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும் எனவும் இதற்கான முடிவுத்திகதி எதிர்வரும் 6 ஆம் திகதியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் 30 வயதிற்குட்பட்டவர்களாகவும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம், தமிழ், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைசித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[24]

## விவசாய பயிற்சியும் தொழில் வழங்கலும்

தமிழீழத்திலே தமது கல்வியை முடித்துக் கொண்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு விவசாயத் துறையில் ஒன்பது மாத கால பயிற்சியினை இலவசமாக வழங்கி தொழில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

பயிற்சியினை திருப்திகரமாக முடித்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கு திறமை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. விவசாய பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல்வேண்டும். அத்தோடு க.பொ.த (உ/த) பரீட்சையில் தாவரவியல், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருப்பின் விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் விண்ணப்ப முடிவு திகதி 06.09.93 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# விஜேவீரவின் கோரிக்கை ஏற்றிருப்பின் அழிப்பு நடவடிக்கை இடம்பெற்றிராது

### லண்டனிலுள்ள ஜே.வி.பி.கிளை தெரிவிப்பு

[லண்டன்]

விஜேவீரவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அரசு அன்று ஏற்றிருந்தால் அதன் பின்னர் ஏற்பட்ட, தற்போதும் ஏற்பட்டு வருகின்ற மக்கள் கொலை உட்பட அழிப்பு நடவடிக்கைகள் எதுவும் நடைபெற்று இருக்காது எனவும் எனவே இதன் முழுப் பொறுப்பையும் சிறிலங்காவின் ஐ.தே.கா அரசே பொறுப்பேற்க வேண்டுமெனவும் பிரிட்டனில் இருந்து இயங்கும் ஜே.வி.பியின் கிளை நிறுவனம் கூறியுள்ளது.

லண்டனிலிருந்து வெளியிடப்படும் 'சினிபுபுர' என்னும் பத்திரிகை இது பற்றி மேலும் கூறுகையில் தற்போது சிறிலங்காவில் நிகழ்வது ஜனநாயகத்திற்கான சண்டை' என்று வர்ணித்திருப்பதுடன் சிறிலங்காவில் உண்மையான சமாதானம் நிலவவும், பயங்கரவாதம் இன்றி அரசியல் நடத்தப்பட வேண்டுமெனில் சட்டப்படியாகவோ அவ்வாறில்லாமலோ ஜே.வி.பியினருக்கு தொந்தரவு கொடுப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 மார்கழி 8-ம் திகதி ஜே.வி.பியின் அப்போதைய தலைவர் றோகண விஜேவீர அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றை மீள் பிரசுரம் செய்துள்ள அப்பத்திரிகை, ஜனநாயகம் மீண்டும் ஸ்தாபிக்கப்படுவதற்கான பல நிபந்தனைகளையும் தெரிவித்துள்ளது. பத்திரிகைகளுக்கான சுதந்திரம் பூரணமாக நிலைநாட்டப்படுவதுடன் சகல அரசியல் கைதிகளும் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்றும், அவசரகால சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும், ஜனநாயக அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகளாவிய ஓவியப் போட்டி

நோராட், யுனெஸ்கோ மற்றும் நோர்வீஜிய வெளிவிவகார அமைச்சு என்பவை ஒருங்கிணைந்து உலகளாவிய ரீதியில் ஓவியப்போட்டியொன்றை நடாத்தவுள்ளது. இந்த ஓவியப் போட்டியில் 2வயது முதல் 18வயது வரையுள்ள அனைவரும் தனித்தோ அல்லது கூட்டாகவோ பங்குபற்ற முடியும் எனவும் நோர்வேயிலுள்ள சிறுவர் ஓவிய அருங்காட்சியகத்திற்கு அக்டோபர் 15ஆம் திகதிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியவகையில் ஓவியங்கள் அனுப்பப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### அலுவலகம் இடமாற்றம்

வரணி குடத்தனை வீதியில் இதுவரை செயற்பட்டு வந்த உபதபால் அலுவலகம் மக்களின் வசதிக்காக வரணி சந்தைக்கு அருகாமையில் இடமாற்றப்பட்டுள்ளது.

(86)

அரிச்சந்திரா

குடியிருப்புக்கு முன்பான

## விவசாயகாணி அனைத்தும் நிர்வாகத்திடம் அளிக்கவும்

[கொழும்பு]

தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியிருப்புகளுக்கு முன்பாக விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்திவரும் காணிகளைத் தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று தோட்ட நிர்வாகம் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட நிர்வாகத்தின் இத்திடீர் நடவடிக்கையால் பல ஆண்டு காலம் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தி வந்த நிலத்தைப் பறிகொடுப்பதோடு அதில் உள்ள உற்பத்தியை அனுபவிக்க முடியாத நிலையும் தங்களுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தொழிலாளர்கள் கவலை கொண்டுள்ளனர்.

தோட்ட நிர்வாகத்தின் உத்தரவுகளுக்கு அடிபணியாத தொழிலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென நிர்வாகம் எச்சரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வாளிகள் வழங்கப்பட்டன

(பருத்தித்துறை)

புலோலி கமநலச் சேவை நிலையப் பகுதியைச் சேர்ந்த சுமார் 650 விவசாயிகளுக்கு கடந்த வெள்ளிக்கிழமை புலோலி கமநலச்சேவை நிலையம் வாளிகளை வழங்கியுள்ளது. கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இவ்வாளிகள் வைகாசி மாதம் முற்பணம் செலுத்திய விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்பட்டது. இதற்கு முன்னர் இக்கமநலச் சேவை நிலையப் பகுதியைச் சேர்ந்த 22 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அதற்கான 'டிலிவரி'' இன்னமும் வழங்கப்படவில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர் (25)

## பெருந்தோட்டத்துறையில் பெரும் நெருக்கடி நிலை

- அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

பெருந்தோட்டத் துறையில் இன்று நிலவுகின்ற நெருக்கடி நிலையானது பொருளாதார ரீதியிலும், தொழிலாளர்நலன் பொறுத்தும் ஒரு ஆரோக்கியமான சூழ் நிலைக்கு வழி வகுப்பதாக அமையவில்லை என்றும் இத்துறைக்கு பொறுப்பான அமைச்சு என்ற ரீதியில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும் இ.தொ.கா பொதுச் செயலாளரும், கைத்தொழில் இராஜாங்க அலுவல்கள் அமைச்சருமான எம்.எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அண்மையில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரூபா ... நடும் ஏற்படுமென்று இ.தொ.கா. நம்பியிருந்ததாகவும் தெரிவித்தார்.

## திருட்டு முயற்சி

வியாபாரியாக சென்ற இளைஞன் ஒருவன், வீட்டில் பெரியவர்கள் இல்லாத நிலையில் சிறுமி ஒருத்தியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்றபோது சிறுமி சத்தமிட்டதைத் தொடர்ந்து தப்பி ஓடிவிட்ட சம்பவம் ஒன்று வடமேற்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கடந்த திங்கள் காலை

வெளிலா எதிர்ப்பு நடவடிக்கையில் இஸ்ரேலிய இராணுவமும், புலனாய்வுத் துறையும் பெயர் பெற்றவை.

இதேவேளை, பாலஸ்தீன விடுதலை இயக்கமானது, 1980ஆம் ஆண்டிற்கு முன்னிருந்தது போன்று தற்பொழுது இல்லை. அவர்கள் தமது தீவிரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டே பல வருடங்கள் ஆகிவிட்டன. அதாவது, இஸ்ரேலிய இராணுவத்திற்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் இராணுவ ரீதியான அச்சுறுத்தலாக இருப்பதாக இல்லை. அத்தோடு, வளைகுடாப் போரின்போது கடைப்பிடித்த கொள்கையினால், பாலஸ்தீன விடுதலை இயக்கம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. மேலும், பாலஸ்தீனத்தின் எந்த ஒரு பகுதியும், பாலஸ்தீன போராளிகளின் கட்டுப்பாட்டிலும் இல்லை.

இந்நிலையிலும், பாலஸ்தீனத்திற்கென ஒரு சுயாட்சித் திட்டத்தை வகுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இஸ்ரேல் அரசிற்கு ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் இத்திட்டத்தை வகுப்பதற்கு, அமெரிக்கா ஓரளவு அழுத்தத்தைப் பிரயோகித்து இருப்பினும், முழுமையாக அமெரிக்காவின் அழுத்தத்தினால் இத்திட்டம் முன்வைக்கப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. ஏனெனில் உலகில் எவருடைய கருத்தையும் பொருட்படுத்தாத நாடு இஸ்ரேல். அதன் வரலாறே அதற்கு சிறந்த உதாரணம். உலகிலேயே மிக கூடுதலான கண்டனத்திற்கு ஐ. நா. சபையினால் இஸ்ரேல் உள்ளான போதும், வளைந்து கொடுக்காத நாடு இஸ்ரேல்.

இந்நிலையானது, தேசிய இனப் பிரச்சினைக்கு 'இராணுவத் தீர்வு' என்பதன் தோல்வியை காட்டுவதாகவே உள்ளது. இஸ்ரேல் தனது இராணுவ வலிமையால், ஆக்கிரமித்த பகுதிகளில் பலகோடி டாலர்களைக் கொண்டு குடியேற்றங்களை நிறுவியும், பாலஸ்தீனர்களை தாயகத்தை விட்டு அடித்து விரட்டியும், அம்மண்ணை தனது பூரண பாதுகாப்பான பகுதியாக ஆக்கிக்கொள்ள முடியவில்லை. ஆயுதத்துடன் இருந்தவர்கள் வெளியில் விரட்டப்பட்ட போதும், சிறுவர்களும், பெண்களும் தமது சுதந்திரத்திற்காக கற்களாலும், தடிகளாலும் போராட்டத்தை நடத்தத் தவறவில்லை. இஸ்ரேலுக்கு ஒரு நிம்மதியற்ற பூமியாகவே பாலஸ்தீனம் உள்ளது.

இது இஸ்ரேலுக்கு மட்டுமல்ல, உலகில் தேசிய இனப் போராட்டங்களை இராணுவ ரீதியாக வெற்றி கொண்டுவிடலாம் எனக் கருதும் சகல சக்திகளுக்கும் ஏற்பட்ட தோல்வியாகும். அத்தோடு, ஆக்கிரமிப்பு மண்ணில் அமைதியாக வாழமுடியாது என்பதற்கான உதாரணமும் ஆகும். இதனை சிறிலங்கா உட்பட தேசிய இனங்களுக்கு எதிராக இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிக்க முற்படும் அரசுகள் யாவும் புரிந்து கொள்ளவேண்டும்.

இதேவேளை, சிறிலங்கா பாலஸ்தீன அனுபவத்துடன் வேறு சிலவிடயங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கெடுபிடிப் போர் முடிவால் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஏற்பட்ட நெருக்கடி போன்றோ, அன்றி பாலஸ்தீனப் போராளிகள் போல் தாயகத்தை விட்டு முற்றாக விரட்டப்பட்டோ, தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டம் இல்லை. தமது தாயகத்தில், தமது காலில் நின்று கொண்டு தமிழீழப் போராட்டம் நடைபெறுகின்றது என்பவையே அவையாகும்.

## விவசாய பயிற்சியும் தொழில் வழங்கலும்

தமிழீழத்திலே தமது கல்வியை முடித்துக் கொண்டு வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு விவசாயத் துறையல் ஒன்பது மாத கால பயிற்சியினை இலவசமாக வழங்கி தொழில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

பயிற்சியினை திருப்திகரமாக முடித்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கு திறமை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. விவசாய பயிற்சிநெறியைப் பயில விரும்புபவர்கள் க.பொ.த[சா/த] பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல்வேண்டும். அத்தோடு க.பொ.த (உ/த) பரீட்சையில் தாவரவியல், இரசாயனம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருப்பின் விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.

தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் விண்ணப்ப முடிவு திகதி 06.09.93 எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## துரோகக் கும்பலினால் குடும்பஸ்தர் கைது

திருமலையில் குடும்பஸ்தர் ஒருவரை ரெலோ துரோகக் கும்பல் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் திருமலையில் உள்ள ஈச்சிலம்பற்றை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து விநாயகபுரத்திற்கு வந்த ரெலோ குழுவினரே திண்ணையடியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான கைலாயபிள்ளை சித்திரவேல் [வயது 32] என்பவரைக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர்.

யில் ஓவியப்போட்டியொன்று நடாத்தவுள்ளது. இந்த ஓவியப் போட்டியில் 8வயது முதல் 18வயது வரையுள்ள அனைவரும் தனித்தோ அல்லது கூட்டாகவோ பங்குபற்ற முடியும் எனவும் நோர்வேயிலுள்ள சிறுவர் ஓவிய அருங்காட்சியகத்திற்கு அக்டோபர் 15ஆம் திகதிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியவகையில் ஓவியங்கள் அனுப்பப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### அலுவலகம் இடமாற்றம்

வரணி குடத்தனை வீதியில் இதுவரை செயற்பட்டு வந்த உபதபால் அலுவலகம் மக்களின் வசதிக்காக வரணி சந்தைக்கு அருகாமையில் இடமாற்றப்பட்டுள்ளது.

(86)

### அரிச்சந்திரா மேடையேற்றம்

மாவைஷயூர் ஜெயசிறி நாடகமன்றத்தினர் வழங்கும் சம்பூர்ண அரிச்சந்திரா நாட்டுக்கூத்து, எதிர்வரும் வெள்ளியன்று மாலை எட்டுமணியளவில் பாவைஷயூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

## பெரும் நெருக்கடி நிலை

### - அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி

(கொழும்பு)

பெருந்தோட்டத் துறையில் இன்று நிலவுகின்ற நெருக்கடி நிலையானது பொருளாதார ரீதியிலும், தொழிலாளர்நலன் பொறுத்தும் ஒரு ஆரோக்கியமான சூழ் நிலைக்கு வழி வகுப்பதாக அமையவில்லை என்றும் இத் துறைக்கு பொறுப்பான அமைச்சு என்ற ரீதியில் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும் இ.தொ.கா பொதுச் செயலாளரும், கைத்தொழில் இராஜாங்க அலுவல்கள் அமைச்சருமான எம்.எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அண்மையில பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரூபா கருணாதிலககாவை சந்தித்துப் பேச்சு நடத்திய அமைச்சர் செல்லச்சாமி மேலும் கூறுகையில், தோட்ட நிர்வாகங்களைத் தனியார் கம்பெனிகளிடம் கையளிக்கும் நடவடிக்கைக்கு இ. தொ. கா. ஆதரவு வழங்கிய போது, இதன்மூலம் பெருந்தோட்டத் துறையிலும் தொழிலாளர் வாழ்விலும் பெரும் அபிவிருத்தியும், மாற்றமும் ஏற்படுமென்று இ.தொ.கா. நம்பியிருந்ததாகவும் தெரிவித்தார்.

## திருட்டு முயற்சி

வியாபாரியாக சென்ற இளைஞன் ஒருவன், வீட்டில் பெரியவர்கள் இல்லாத நிலையில் சிறுமி ஒருத்தியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்றபோது சிறுமி சத்தமிட்டதைத் தொடர்ந்து தப்பி ஓடிவிட்ட சம்பவம் ஒன்று வட்டு மேற்குப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

கடந்த திங்கள் காலை வட்டுமேற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் பப்படம் விற்கச் சென்ற மேற்படி இளைஞர், அங்கு பெரியவர்கள் இல்லை என்பதை அறிந்து அங்கிருந்த சிறுமியை பயமுறுத்தி கழுத்திலிருந்த சங்கிலியை அறுக்க எத்தனித்தபோது, இச்சிறுமி கூக்குரலிட்டபோது மேற்படி நபர் சைக்கிளில் ஏறி தப்பி ஓடிவிட்டதாக தெரிகிறது.

## சீனாவில் பெரு வெள்ளம் சுமார் 400பேர் வரை பலி

சீனாவில் அணைக்கட்டு ஒன்று உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்ததில் பல கிராமங்களையும் சேர்ந்த நானூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சீனாவின் மேற்கு மாகாணமான குவெங்காயில் வெள்ளிக்கிழமையன்றிரவு இவ் அணைக்கட்டு உடைப்பு எடுத்தது. 263 பேர் உடல் அடையாளம் காணப்பட்டதாகவும், 180 பேரை இன்னமும் காணவில்லை என்றும், 330பேருக்கு காயம் ஏற்பட்டதுடன் பெருமளவு சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாக சீன அரசின் செய்தி நாபனம் அறிவித்துள்ளது

## பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை மத்திய அமைச்சர் விருத்தார்

(டில்லி)

இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்றும், ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு உதவுவதை நிறுத்தவேண்டும் என்றும், உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் எச்சரிக்கை செய்துள்ளார்.

டார்ஜிலிங் மாவட்டம் குர்ஷியாங்கில் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பஞ்சாப் மற்றும் அசாம் மாநிலங்களிச்சட்டம் ஒழுங்கு நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். ஜம்முகாஷ்மீரில் விரைவில் அமைதி நிலைநாட்டப்படும் என்றும், தவறான வழியில் இட்டுச்செல்லப்பட்ட இளைஞர்கள் விரைவில் தேசிய நீரோட்டத்தில் இணைந்து கொள்வர் என்று எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

## இந்தியாவுக்கு செல்லும்படி நிர்வாகங்கள் அறிவுறுத்தல்

(கொழும்பு)

இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருக்கும் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் உடனடியாக இந்தியா செல்ல வேண்டுமென்றும், அவ்வாறு போக மறுப்பவர்களுக்கு வேலை வழங்குவது நிறுத்தப்படுமென்றும் கம்பெனி நிர்வாகங்கள் அறிவுறுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தோட்ட நிர்வாகங்களைப் பொறுப்பேற்றுள்ள தனியார் கம்பெனிகள் தோட்டங்களில் ஆட்குறைப்புக்கான நடவடிக்கைகளில் ஒன்றாகவே இந்தியக் கடவுச்சீட்டு பெற்றுள்ளவர்களை இந்தியாவுக்குப் போக நிர்ப்பந்திக்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்போர் விடயத்தில் இலங்கை இந்திய அரசாங்கங்களே முடிவெடுக்க வேண்டும் என்பதும், தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுள்ள தனியார் கம்பெனிகள் இவ் விடயத்தில் முடிவெடுக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலிய - பாலஸ்தீன உடன்பாடு; இறுதிவடிவம் கொடுக்க முயற்சி

### வாஷிங்டனில் பேச்சுக்கள்

[வாஷிங்டன்]

பாலஸ்தீனியப் பிராந்தியத்தில் பாலஸ்தீனியர்களுக்கு வரையறுக்கப்பட்ட சுயாட்சி வழங்குவது தொடர்பான நகல் தீர்மானத்திற்கு இறுதி வடிவம் கொடுக்கும் பேச்சுகளில் இஸ்ரேலிய, பாலஸ்தீனிய அதிகாரிகள் வாஷிங்டனில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்குக் கரை நகரமான ஜெரிக்கோவிலிருந்தும் காஸா பள்ளத்தாக்குப் பகுதியிலிருந்தும் இஸ்ரேலிய துருப்புக்கள் மீளப் பெறுவதையும் இந்த நகல் தீர்மானம் உள்ளடக்கியிருக்கும் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இடையில இந்த நகல் தீர்மானம் இறுதி வடிவம் பெற்றுவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக பலஸ்தீனிய தூதுக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த நகல் தீர்மானத்திற்கு இஸ்ரேலிய அமைச்சரவை கடந்த திங்கட்கிழமையன்று ஒப்புதல் தெரிவித்திருப்பதும், பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் செயற் குழு இது தொடர்பாக ஆராய்ந்திருப்பதும் தெரிந்ததே.

## வீரப்பனின் சகாக்கள் ஐவர் மற்றும் 11 பேருடன் கைது

(சென்னை)

சந்தனமரக்கடத்தல்காரன் என அழைக்கப்படும் வீரப்பனின் சகாக்கள் எனக் கூறப்படும் ஐந்து பேர் உட்பட பதினாறு பேரை தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படைப் பிரிவினர் நேற்றுமுன்தினம் காலை பர்கூருக்கு அருகேயுள்ள காட்டுப்பகுதியான வரட்டுக் கோட்டையில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவர்களில் பதினொரு பேர் சட்ட விரோதமான முறையில் வீரப்பனின் உதவியாட்களுக்கு ஆயுத விநியோகம் செய்து வந்தனர்கள் என்று தமிழ்நாடு சட்டமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு காவல்துறையின் சிறப்பு டி. ஐ. ஜீயான வால்டர் தேவாரம் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டதாகவும், முதலில் காவல் துறையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த அவர்கள் பின்னர் சரண் அடைந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# பி. எல். ஓவை இஸ்ரேல் அங்கீகரிக்கும்

## இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர்

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை அங்கீகரிக்கும் நிலையில் இஸ்ரேல் உள்ளதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சிமோன் பெரஸ் கூறியுள்ளார். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்து பாலஸ்தீனியர்களுக்கான சுயாட்சியை ஏற்றுக்கொள்வது அரபு- இஸ்ரேல் உறவை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான இரகசிய பேச்சுகள் நேற்றும் நோர்வேயில் தொடர்ந்து நடந்தன. இரு தரப்பும் பரஸ்பரம் தம்மை அங்கீகரித்துக் கொள்வதில் இணக்கம் காண முயற்சித்து வருகின்றன.

## மடுக்குளத்தில் வீரவணக்க கூட்டம்

(வவுனியா)

வவுனியா மடுக்குளத்தில் 8 ஆம் மாதத்தில் வீரச்சாவை தழுவிய மாவீரர்களைநினைவு கூருமுகமாக நகர்வட்டம் பூவரசங்குள வட்டம் ஆகிய வட்டங்களில் நேற்று முன்தினம் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

ஈகைச்சுடரை வன்னி மாவட்ட பதில் அரசியல் பொறுப்பாளர் ஞானம் ஏற்றிவைக்க இதைத்தொடர்ந்து மாவீரர்களின்பெற்றோரும், போராளிகளும் ஈகைச் சுடர்களை ஏற்றி வைத்தனர். வன்னி மாவட்ட பதில் அரசியல் பொறுப்பாளர் ஞானம், நடுவப்பணியகத்தை சேர்ந்த செந்தூரன், வவுனியா கோட்ட கலை பண்பாட்டுக் கழக பதில் பொறுப்பாளர் ஜெயபாலன், நகர்வட்ட அரசியல் பொறுப்பாளர் வேணுகாந்தன், வவுனியா கோட்ட பதில் அரசியல் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் கலை பண்பாட்டுகழகத்தினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## பாலஸ்தீனம் எதையும் விட்டுக் கொடுக்கவில்லை

—யாசிர் அரபாத்

(கெய்ரோ)

பாலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலுக்கு எதையும் விட்டுக் கொடுத்துவிடவில்லை என்றும், தனது இலக்குகளை அடைவதற்கான முயற்சியிலேயே அது ஈடுபட்டிருப்பதாகவும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் கூறியுள்ளார்.

கெய்ரோவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும்கூறுகையில் காஸாவில் இருந்தும், ஜெரிக்கோவில் இருந்தும் இஸ்ரேலிய துருப்புக்கள் வெளியேற்றப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை சிரிய அதிபர் ஆஸாத்தும், ஜோர்தான் மன்னர் உசைனும் இந்த ஒப்பந்தம் தொடர்பாக தங்களுடன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் எந்த விதமான கலந்தாலோசனைகளையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் லெபனான் வெளியுறவு அமைச்சர் அரபுகள் மத்தியில் போதிய ஒத்துழைப்பு இல்லை என்றும் சுயாட்சிப் பிரதேசத்தில் பாலஸ்தீனியருக்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் போதுமானவையல்ல என்றும் கூறியுள்ளார்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து (02-09-93)



### செல்வி சிவலிங்கம் துஷியந்தி

சாவகச்சேரி மேற்கு ஸ்ரீ நாரத வித்தியாலய வீதியில் வசிக்கும் சிவலிங்கம் அமுதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி துஷியந்தி தனது 1-வது பிறந்தநாளை இன்று 02-9-93 (வியாழக்கிழமை) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பசிலன் அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அன்ரப்பா, பெரியன்ரி, சுட்டிச்சித்தி, பஞ்சன் சித்தப்பா, செல்வம் சித்தி, பெரியங்கிள் (பிரான்ஸ்) குகாஅங்கிள் (சவூதி), சின்னஅங்கிள், சபீன்சன் அண்ணா, பிந்தா அக்கா,

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 01-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10762

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-2288, 41-9997, 28-0429, 27-8155, 42-6157, 41-5178, 43-4045, 41-9663, 24-6211, 24-9938, 26-9992, 26-1349, 24-4108.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

24-2680, 28-4707, 28-9259, 24-8391, 28-3289, 26-2366, 24-8353, 27-0849, 27-2004, 28-3439,

## பாண் விற்பனை; விநியோகம்

# சுகாதாரம் பேணப்படாவிடில் நடவடிக்கை எடுக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

திறந்த நிலையில் பாண் விற்பனை செய்பவர்களுக்கும் பாணை எடுத்துச் சென்று விநியோகிப்பவர்களுக்கும் எதிராக உணவுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக யாழ்ப்பாண சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை அறிவுறுத்தியுள்ளது.

பேக்கரிகளிலிருந்து சுகாதார சீர்கேடான முறையில் பாண் எடுத்துச் செல்பவர்களுக்கும், கடைகளில் சுகாதார சீர்கேடான முறையில் பாண் விற்பனை செய்பவர்களுக்கும் எதிராக 1980 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரகாரம் தங்கள் பகுதி சுகாதார பரிசோதகர்களை நடவடிக்கை எடுக்கும் படியும்,

மேற்குறிப்பிட்ட பிரகாரம் பாண் விற்பனை செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத பட்சத்தில் அவர்களுடைய கடையின் அல்லது பேககரியின் பெயர் விலாசம் கொண்ட விபரங்களையும் சுகாதார பரிசோதகர் அறிக்கையையும் பணிமனைக்கு அனுப்பி வைக்கும்படி சகல சுகாதார வைத்திய அதிகாரிகளும் கேட்கப்பட்டுள்ளனர்.

சுகாதார சீர்கேடான முறையில் பாண் விற்பனை செய்யப்படுவதும் எடுத்துச் செல்லப்படுவதும் தொடர்பாக தமக்கு வந்த பல முறைப்பாடுகளை அடுத்தே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக வைத்திய கலாநிதி க. தா. சிவபாதம் தெரிவித்தார். (சி)

# பல்கலை. அனுமதி தாமதம் பெற்றோர் அதிருப்தி

[கொழும்பு]

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி கோரும் மாணவர்களின் பெற்றோர் அனுமதியில் ஏற்படும் தாமதம் மற்றும் பல்கலைக் கழக அனுமதி சம்பந்தமான விதிகளில் காணப்படும் குறைகள் குறித்தும் அதிருப்தி தெரிவிக்கின்றனர் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகங்களில் மாணவர்களை அனுமதிப்பதற்கு நடைமுறைப்படுத்தும் விதிமுறை காரணமாக 1991 இல் க. பொ. த. [உயர் தரம்] பரீட்சையில் சித்திய டைந்த மாணவர் இதுவரை பல்கலைக்கழக அனுமதி பெறவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது

பல்கலைக்கழக அனுமதிக்குரிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள், பல்கலைக்கழகங்களில் நுழைய முடியாதிருக்க, குறைந்த புள்ளிகளைப் பெற்று அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு வெளியில் வேறு கற்கை நெறிகளைப் பயின்று கல்வியில் முன்னேற்றம் கண்டிருப்பதாகவும் பெற்றோர் தரப்பில் சொல்லப் படுகிறது. பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய மாணவர்கள் பலர் மேலும் பல்கலைக் கழகங்களை நம்பியிராமல் தொழில் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மக்கள் அஞ்சலி

நேற்று முன் தினம் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தில் வீரச்சாவு அடைந்த கப்டன் இரும்பொறையின் புகழுடல் நேற்று தொண்டமானாறு, கோண்டாவில் கார்த்திகா பாடசாலை, தீவக கோட்ட செயலகம் ஆகியவற்றிலும் அவரது இல்லத்திலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப் பட்டது. கார்த்திகா பாடசாலையில் இடம்பெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் இளையவன் யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகை செல்வி ஆகியோர் உரையாற்றினர்.

மாலை புகழுடல் இராணுவ மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (22)

## அதிபர் கூட்டம்

சாவகச்சேரிக் கோட்டத்திலுள்ள சகல அதிபர்களுக்கு

## போதைப்பொருள் பாவனை தெற்கில் அதிகரிப்பு

(கொழும்பு)

அண்மைக் காலமாக தெற்கில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளோர் தொகை மிகவேகமாக அதிகரித்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாம்.

களுத்துறையிலிருந்து கதிர்காமம வரை ஹிரோயின் போதைப் பொருள் பாவிப்போர் தொகை அதிகரித்துள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர். காலி நகரை மத்திய நிலையமாக வைத்து போதைப்பொருள் வர்த்தகத்தை ஒரு பிரிவு நடத்திவருகிறது. மற்றைய குழுவொன்று சாதாரண மக்களுக்கு இதனை விற்பனை செய்கிறது. உல்லாசப் பயணிகளுக்கு போதைப் பொருளை விற்பனை செய்வதில் இன்னோர் பிரிவு இயங்கி வருகிறது

## நிதிப்

நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம். எதிர் வரும் சனிக்கிழமையன்று காலை எட்டு மணியளவில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் பிரதம



## செல்வி சிவலிங்கம் துஷியந்தி

கரவெட்டி மேற்கு ஸ்ரீ நாரத வித்தியாலய வீதியில் வசிக்கும் சிவலிங்கம் அமுதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி துஷியந்தி தனது 1-வது பிறந்தநாளை இன்று 02-9-93 (வியாழக்கிழமை) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, பசிலன் அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அன்ரப்பா, பெரியன்ரி, கட்டிச்சித்தி, பஞ்சன் சித்தப்பா, செல்வம் சித்தி, பெரியங்கிள் (பிரான்ஸ்) குகாஅங்கிள் (சவூதி), சின்னஅங்கிள், சபீன்சன் அண்ணா, பிந்தா அக்கா, சேகர்மாமா, செல்லம்மா அத்தை, விஜயா அத்தை, குணதர்சன் மச்சான், தவதர்சினி, தவலோசினி, தவஜர்சினி, தவறோகினி, சர்ச்சலா மச்சாள்மார், சவூதியில் வசிக்கும் ராசன்மாமா, நாதன்மாமா, வாசன்மாமா, மோசன்மாமா, தேவன் அண்ணா, ரகு சித்தப்பா, ஜேர்மனியில் வசிக்கும் தருமு அப்பப்பா குடும்பம், தெய்வேந்திரம் பெரியப்பா, பிரான்சில் வசிக்கும் நவம் அப்பப்பா குடும்பம், சித்தி அம்மம்மா குடும்பம், குணாசித்தப்பா குடும்பம், சுவிசில் வசிக்கும் உதயம் அன்ரி குடும்பம், றஞ்சியன்ரி குடும்பம், நாயன்மார்கட்டு அம்மம்மா குடும்பம், யசிஅண்ணா (அவுஸ்ரேலியா) மற்றும் அப்பப்பா, அப்பம்மாமார், அம்மப்பா, அம்மம்மாமார், பெரியப்பா பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார், மச்சான், மச்சாள்மார், அண்ணா, அக்காமார், பாட்டிமார், பூட்டிமார், உற்றார் உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அருள் பெற்று சீரும் சிறப்புமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கரவெட்டி மேற்கு (5814) குடும்பத்தினர்.


## எமது புதிய வெளியீடுகள்

1) சத்யராஜ் - சுகன்யா - ரகுமான்
**உடன் பிறப்பு**

2) பானுச்சந்தர் - சோபனா - கஸ்தூரி
**கேங்வார்**

3) பானுச்சந்தர் - விஜயசாந்தி
**மறவர் மகள்**

4) செஞ்சோலை
(பாடல்கள் வீடியோ பிரதி)

5) ஒளிவீச்சு
(மண்கிண்டிமலை தாக்குதல்)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7325)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


இருந்தும், ஜெரிக்கோவில் இருந்தும் இஸ்ரேலிய துருப்புக்கள் வெளியேற்றப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை சிரிய அதிபர் ... சுயாட்சிப் பிரதேசத்தில் பாலஸ்தீனியருக்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் போதுமானவையல்ல என்றும் கூறியுள்ளார்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 01-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10762

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-2288, 41-9997, 28-0429, 27-8155, 42-6157, 41-5178, 43-4045, 41-9663, 24-6211, 24-9938, 26-9992, 26-1349, 24-4108.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

24-2680, 28-4707, 28-9259, 24-8391, 28-3289, 26-2366, 24-8353, 27-0849, 27-2004, 28-3439, 22-4895, 27-7653.


## முக்கிய அறிவித்தல்
### O.D.O. & V.D.O.
### தொடர்பான அறிவித்தல்

அனைத்து ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு (O.D.O & V.D.O) நாடாக்களை பதிவு செய்பவர்கள், வாடகைக்கு கொடுப்பவர்கள், பதிவு நாடாக்களை விற்பனை செய்பவர்கள் அனைவரிற்கும் அறியத்தருவது, இதுவரை தமிழீழக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஒலி, ஒளி நாடாக்களை (O.D.O & V.D.O.) நீங்கள் இலகுவில் பெறக்கூடிய வகையில் யாழ்- பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தமிழீழ வானொலித் தொடர்பகத்துடன் தொடர்பு கொண்டு தவறாது அனைவரும் எமது ஒலி, ஒளி நாடாக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என, "நிதர்சனம்" அறியத் தருகின்றது.

குறிப்பு:-

தமிழீழத்தில் நடைபெறும் அனைத்து முக்கிய சம்பவங்களையும், பிறநாட்டுச் சம்பவங்களையும் தொகுத்து மாதம்தோறும் எம்மால் வெளியிடப்படும், "ஒளிவீச்சு" V.D.O சஞ்சிகையில் இம் மாதம் விடுதலைப் புலிகளால் "இதயபூமி 1" எனப் பெயரிடப்பட்டு நடாத்தப்பட்ட "மண்கிண்டி மலை இராணுவமுகாம் தகர்ப்பு", "பொலனறுவையில் நடாத்தப்பட்ட இரு தாக்குதல்கள்" என்பவற்றை களத்தில் நின்று நேரடியாகப் பிடிக்கப்பட்ட படங்களையும் தாங்கி வருகிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரினதும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

**"நிதர்சனம்" நிறுவனம்**

தொடர்பு:
தமிழீழ வானொலி
தொடர்பகம்.
யாழ். பழைய பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம்.
(சி-7334)


முடல் நேற்று தொண்டமானாறு, கோண்டாவில் கார்த்திகா பாடசாலை, தீவக கோட்ட செயலகம் ஆகியவற்றிலும் அவரது இல்லத்திலும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. கார்த்திகா பாடசாலையில் இடம்பெற்ற வீர வணக்கக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் இளையவன் யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகை செல்வி ஆகியோர் உரையாற்றினர்.

மாலை புகழுடல் இராணுவ மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (22)

## அதிபர் கூட்டம்

சாவகச்சேரிக் கோட்டத்திலுள்ள சகல அதிபர்களுக்குமான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு டிறிபேக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அறிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அங்கத்துவம் பெறாத சகல சமூக சேவை அமைப்புகளையும் தொண்டர் நிறுவனங்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தில் எதிர்வரும் சனி காலை 8-30 மணியளவில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் சமூகம் தருமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுள்ளது.

## பரீட்சை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த மக்கள் வங்கி ஊழியர்களுக்கான பதவிஉயர்வுப பரீட்சை யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் நல்லூர் சாதனா சி.சி. தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறுமென யாழ். பிரதேச கல்விப் பணிமனை அறிவித்துள்ளது. [பா]

கடந்த ... விடுவதாகவும் கிளிநொச்சி ஆஸ்பத்திரி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது இதனால் கிளிநொச்சியில் விசர்நாய் கடிக்கு உள்ளாகுபவர் உயிராபத்தான நிலையில் சிரமத்தின் மத்தியில் வவுனியா அனுப்ப வேண்டிய அவலநிலையுள்ளது. கிளிநொச்சிக்கு மன்னார், முல்லைத்தீவு பகுதிகளிலிருந்தும் விசர்நாய் கடிக்குள்ளானவர்கள் சிகிச்சைக்கு வருவது குறிப்பிடத்தக்கது. (கி)

## தெற்கில் அதிகரிப்பு

(கொழும்பு)

அண்மைக் காலமாக தெற்கில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளோர் தொகை மிகவேகமாக அதிகரித்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாம்.

களுத்துறையிலிருந்து கதிர்காமம வரை ஹிரோயின் போதைப் பொருள் பாவிப்போர் தொகை அதிகரித்துள்ளதாக பொலிசார் கூறியுள்ளனர். காலி நகரை மத்திய நிலையமாக வைத்து போதைப்பொருள் வர்த்தகத்தை ஒரு பிரிவு நடத்திவருகிறது. மற்றைய குழுவொன்று சாதாரண மக்களுக்கு இதனை விற்பனை செய்கிறது. உல்லாசப் பயணிகளுக்கு போதைப் பொருளை விற்பனை செய்வதில் இன்னோர் பிரிவு இயங்கி வருகிறது.

## நிதிப்

நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் அகதிகளுக்கான வீடுகளை அமைக்கவும் கொடுப்பனவுகளை வழங்கவும் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம். எதிர்வரும் சனிக்கிழமையன்று காலை எட்டு மணியளவில் கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக, யாழ்ப்பாண செயலகத்தின் சமூகசேவைப் பகுதி அத்தியட்சகர் திருமதி க. சிவசிதம்பரம் கலந்து கொள்ளவுள்ளார்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை
**சிவலிங்கம் தெய்வேந்திரன்**
(கோவிந்தன்)
வினாயகபுரம் திருக்கோவில்
(அம்பாறை மாவட்டம்)

தாயின் மடியில்: 11-10-1973
மண்ணின் மடியில்: 02-09-1991

சகோதரனே கோவிந்தா
தமிழீழ மக்கள் மேல்
பரிதாபம் கொண்டு
எம் நாட்டுக்காய்
எம் மக்களுக்காய்
தோல்வி நினைக்காது
இரத்தம் சிந்தி-நீ
வீர மரணம் அடைந்துவிட்டாய்
உன் வீரத்தைக் கூட
உன் இரத்த பாசங்கள்
காணவில்லையே.
இனி நீ விட்டுச் சென்ற பாதையை
நாம் தொடர்வோம்.

இங்ஙனம்
—குடும்பத்தினர்.

ஐங்கு சந்தி,
132, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (5816)